DINAMALAR

10 AUG 2022

PAGE 11

# தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலை., சாதனை

**புதுச்சேரி, ஆக. 10–** 'அவுட்லுக் – ஐகேர் இந்தியா 2022' வெளியிட்ட மத்திய பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 4வது இடம் பிடித்து சாதித்துள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகம் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்தியா முழுவதும் உள்ள சிறந்த மத்திய பல்கலைகழகங்கள் தரவரிசை பட்டியலை, சமீபத்தில் 'அவுட்லுக் – ஐகேர் இந்தியா 2022' வெளியிட்டது. அதில், புதுச்சேரி பல்கலைக் கழகம், 1000 புள்ளிகளுக்கு, 887.46 புள்ளிகள் பெற்று, 4ம் இடம் பிடித்துள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியல், பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், சிறந்த கல்வி சார் ஆராய்ச்சி, தொழில் துறையோடு இணைந்த விரிவாக்கம், ஆளுமை, விரிவாக்கம், பன்முகத் தன்மை ஆகிய அம்சங்களின் அடிப்படையில், அமைகிறது.

புதுச்சேரி பல்கலைக் கழகம் 6வது இடத்தில் இருந்து 4வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. ஒட்டுமொத்த மதிப்பெண் 853.91லிருந்து இந்தாண்டு 887.46 ஆக உயர்ந்துள்ளது.

இச்சாதனை, பல்கலை ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், மாணவர்களின் உழைப்பிற்கு கிடைத்த வெகுமதியாகும் என தெரிவித்து, அவர்களுக்கு துணைவேந்தர் குர்மீத் சிங், பாராட்டு தெரிவித்துள்ளார்.

வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தை மேலும் சிறந்த நிலைக்கு கொண்டு செல்ல அனைவரும் தங்களின் முயற்சிகளை தொடர வேண்டும் என கேட்டுக் கொண்டார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

THE HINDU

10 AUG 2022

PAGE 2

# PU ranks 4th among Central varsities in recent survey

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University was ranked among top Indian Central universities in the recently released Outlook-ICARE India 2022 survey report.

A press note said Pondicherry University ranked 4th among the Central Universities in India with an overall score of 887.46 points out of 1000 points.

The ranking framework measured the academic institutions with the help of five key parameters – academic research excellence, industry interfere and placement, infrastructure, governance and diversity.

The University moved up from the 6th place to the 4th position among Central Universities with the overall score compared to 2021, the press note also said.